செ.வெ.எண்: 8/டிசம்பர் /2019 நாள்: 4.12.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் 2019 நடைபெறுவதையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

-------

உள்ளாட்சி தேர்தல் 2019 - தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான 2019ம் ஆண்டுக்கான தேர்தல் அறிவிப்பை கடந்த 02.12.2019 வெளியிட்டதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று **(04.12.2019)** நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பின்வரும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருகின்ற 27.12.2019 மற்றும் 30.12.2019 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. 14 ஊராட்சி ஒன்றியங்களில் ஆண் வாக்காளர்கள் 5,96,962 நபர்களும், பெண் வாக்காளர்கள் 6,23,993 நபர்களும், திருநங்கைகள் 62 நபர்களும் என மொத்தம் 12,21,017 வாக்காளர்கள் உள்ளனர்.

**தேர்தல் அட்டவணை பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது :**

| | | |
|---|---|---|
| 01. | தேர்தல் அறிவிப்பு பிரசுரித்தல் மற்றும் வேட்பு மனுக்கள் பெறுதல் | 06.12.2019 |
| 02. | வேட்புமனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் | 13.12.2019 |
| 03. | வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல் | 16.12.2019 |
| 04. | வேட்பு மனுக்களை திரும்பப் பெறுதல் | 18.12.2019 |
| 05. | வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | |
| | 1) முதல் கட்ட வாக்குப்பதிவு | 27.12.2019 |
| | 2) இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு | 30.12.2019 |
| 06. | வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | 02.01.2020 |
| 07. | தேர்தல் நடவடிக்கைகள் முடிவுபெறும் நாள் | 04.01.2020 |
| 08. | தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி தலைவர்களின் முதல் கூட்டம் மற்றும் பதவி ஏற்பு நாள் | 06.01.2020 |
| 09. | மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தலைவர்/துணைத்தலைவர் மற்றும் கிராம ஊராட்சித் துணைத்தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தலுக்கான கூட்ட நாள் | 11.01.2020 |

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடந்த 02.12.2019 முதல் உடனடியாக அமலுக்கு வரப்பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஊரக பகுதிகளுக்கு மட்டும் இந்த தேர்தல் நடத்தை விதிமுறைகள் பொருந்தும். தேர்தல் நடத்தை விதிமுறைகள் 02.12.2019 முதல் அனைத்து தேர்தல்களையும் நடத்தி முடிக்கும் வரையிலும் அமலில் இருக்கும்.

தேர்தல் வைப்புத் தொகை (Depositing)
தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்பவர்கள் வைப்புத்தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | உள்ளாட்சி அமைப்புகள் விபரம் | தொகை ரூ. | |
|---|---|---|---|
| | | பொதுப்பிரிவினர் | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள் |
| 01. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 200 | 100 |
| 02. | கிராம ஊராட்சித்தலைவர் தேர்தல் | 600 | 300 |
| 03. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தல் | 600 | 300 |
| 04. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல் | 1000 | 500 |

**தேர்தல் செலவினங்கள் :**

வேட்பாளர்களுக்கான அதிகபட்ச தேர்தல் செலவின வரம்பானது கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ரூ.9,000மும், கிராம ஊராட்சி தலைவர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ரூ.34,000மும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ரூ.85,000மும், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ரூ.1,70,000மும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் உரிய அலுவலரிடம் தேர்தல் செலவினக் கணக்குகளை ஒப்படைத்திட வேண்டும். ஒப்படைக்கத் தவறுபவர்கள் மீது தேர்தல் ஆணையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட இயலாதவாறு மூன்று ஆண்டுகளுக்கு தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

**வேட்பு மனு தாக்கல் செய்யும் இடங்கள் :**

வேட்பு மனு தாக்கல் வருகின்ற 06.12.2019 முதல் 13.12.2019 வரை மனுத்தாக்கல் செய்ய அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான வேட்பு மனு தாக்கல் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி அலுவலகத்தில் நடைபெறும். கிராம ஊராட்சி மன்றத்தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கான வேட்பு- மனுதாக்கல் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறும்.

**பாதுகாப்பு ஏற்பாடுகள் :**

மக்கள் சுதந்திரமாகவும், அச்சமின்றியும் வாக்களிக்க ஏதுவாகவும், வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப்பதிவு பொருட்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லவும், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவதை உறுதி செய்திடவும் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதட்டம் நிறைந்த வாக்குச்சாவடிகள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களால் கண்டறியப்பட்டு அதிகபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் அளிக்கப்படுவதோடு, அந்த வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடவடிக்கைகளை வீடியோ கிரா∴பி / நுண்தேர்தல் மேற்பார்வையாளர்கள் / இணையதள கண்காணிப்பு (வெப் ஸ்ட்ரீமிங்) மூலம் பதிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மறைமுகத் தேர்தல்கள் :

சாதாரண நேரடித் தேர்தல்கள் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளைக் கொண்டு மாவட்ட ஊராட்சித்தலைவர், மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஊராட்சி ஒன்றியத் துணைத்தலைவர், கிராம ஊராட்சி துணைத்தலைவர் ஆகிய பணியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல்கள் 11.01.2020 அன்று நடைபெறும்.

**தேர்தல் நடத்தை விதிமுறைகள் :**

தேர்தல் நடததை விதிகள் நமது மாவட்டத்தில் உள்ள ஊராக பகுதிகளுக்கு மட்டும் கடந்த 02.12.2019 முதல் உடனடியாக அமலுக்கு வருகின்றது. அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும், தேர்தல் நடத்தை விதிகளைக் கடைப்பிடித்து, தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெற எல்லா விதத்திலும் தேர்தல் ஆணையத்தோடு ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஊரக உள்ளாட்சித் தேர்தல் இட ஒதுக்கீடு விபரம் :**

| வ. எண் | ஒதுக்கீடு விபரம் | எஸ்.டி (பெண்) | எஸ்.டி (பொது) | எஸ்.சி (பெண்) | எஸ்.சி (பொது) | பொது (பெண்) | பொது | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | சிற்றுராட்சி வார்டு உறுப்பினர் | 17 | 11 | 471 | 259 | 1336 | 1314 | 3408 |
| 02. | சிற்றூராட்சித் தலைவர் | 02 | 02 | 43 | 42 | 157 | 158 | 404 |
| 03. | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | 02 | -- | 27 | 22 | 96 | 94 | 241 |
| 04. | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | -- | -- | 03 | 02 | 09 | 10 | 24 |

மேற்குறிப்பிட்ட இட ஒதுக்கீடு பற்றிய முழுமையான விபரம் சம்மந்தப்பட்ட ஊரக உள்ளாட்சி அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் திரு.சி.ரவிச்சந்திரன் (பகுஜன் சமாஜ்), திரு.ம.காளீஸ்வரன் (பாரதிய ஜனதா கட்சி), திரு.ஏ.கே.திராவிடமணி (இந்திய கம்யூனிஸ்ட்), திரு.கே.வி.எஜ்.இந்துராஜா, (மார்க்சிஸ்ட்), திரு.ராஜா நஜீர் (இந்திய தேசிய காங்கிரஸ்), திரு.ஜி.பி.கோவிந்தராஜ் (தேசியவாத காங்கிரஸ்), திரு.எஸ்.பி.கருப்பன் (அ.இ.அ.தி.மு.க.), திரு.ஆர்.பாஸ்கரன் (தி.மு.க.), தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் ஆகிய கட்சிகளைச் சார்ந்த பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :**

செ.தி. 4/12/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**